

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (10.9.2025) சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற "காவலர் நாள் விழா 2025" இல், காவலர் நாள் விழாவை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிபெற்ற காவலர் குடும்பங்களைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில், காவல் துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) க. வெங்கடராமன், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ. அருண் உள்ளிட்ட காவல்துறை உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 9.9.2025 அன்று தலைமைச் செயலகத்தில், மைண்ட்க்ரோவ் டெக்னாலஜிஸ் (Mindgrove Technologies) நிறுவனத்தின் இணை நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அலுவலர் டி.ஆர். சஷ்வத், தலைமைச் செயல்பாட்டு அலுவலர் உமா மகேஸ்வரன் ஆகியோர் சந்தித்து பேசினார்கள். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில்

# கலைஞர் 102வது பிறந்த நாள் விழா - மாபெரும் பொதுக்கூட்டம்!

## நல உதவிகள் வழங்கி பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

திருவண்ணாமலை, செப். 11-

திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா நடைபெறவுள்ளது. விழாவில் கலந்து கொண்டு, நலஉதவிகள் வழங்கி பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றுகிறார்.

12.09.2025 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு, திருவண்ணாமலை மாநகரம், நல்லவன் பாளையத்தில் திருவண்ணாமலை மாநகர திமுக சார்பில், முத்தமிழறிஞர் கலைஞரின் 102வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. பொதுக்கூட்டத்திற்கு மேற்கு ஒன்றிய செயலாளர் மெய்யூர் சந்திரன் தலைமை வகிக்கிறார்.

மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், ஒன்றிய செயலாளர்கள் த.ரமணன், பெ.கோவிந்தன், பொதுக்குழு உறுப்பினர் து.கென்னடி, மாநகர பகுதி செயலாளர்கள் விஜி (எ) சு.விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம். மேற்கு ஒன்றிய அவைத் தலைவர் சம்மந்தனூர் மணி, மாவட்ட பிரதிநிதிகள் எம்.ஜி.சுப்பிரமணி, சி.பாபு, இல.சரவணன், ஒன்றிய பொருளாளர் பா.ஏழுமலை, ஒன்றிய துணை செயலாளர்கள் சுபாசெல்வமணி, யுவராஜ், நாக.சங்கர், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் ஏ.பாஷா, மாவட்ட துணை அமைப்பாளர் ஆ.தே.முருகையன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாநகர பகுதி செயலாளர் லயன் பா.ஷெரீப் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, பயனாளிகளுக்கு நலஉதவிகள் வழங்கி பொதுப்பணித் துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு சிறப்புரையாற்றுகிறார்.

பொதுக் கூட்டத்தில் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் பிரியா ப.விஜய ரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், தொ.மு.ச., மாநில துணை செயலாளர் க.சௌந்தர ராசன், செய்தி தொடர்பு இணைச் செயலாளர் சிவ. ஜெயராஜ்.

மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஜெ.மெய்கண்டன், ஏ.ஏ.ஆறுமுகம், ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், பொன். தனுசு, எச்.சாதிக்பாட்சா, கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர்.பிரவீன்ஸ்ரீதரன், சி.பி. பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், எல்.ஐ.சி.து.வேலு, கற்பகம்சரவணன், உ.நித்யா, தொ.மு.ச கவுன்சில் செயலாளர் இரா.ஆறுமுகம்,

ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி. அண்ணாமலை, ஆராஞ்சி ஆறுமுகம், சி.சுந்த பாண்டியன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த. செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன், செங்கம் நகரச் செயலாளர் மு.அன்பழகன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, கு.பாலசுப்பிரமணி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், கா.சு. இளங்கோவன், அன்பரசி ராஜசேகர்,

பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, பா.முருகையன், எம்.சீனுவாசன், மாநகர மேயர் நிர்மலா வேல் மாறன், துணை மேயர் சு.ராஜாங்கம், பேரூராட்சி மன்ற தலைவர்கள் கோ.சரவணன், கௌரி நடராஜ், செல்வபாரதி மனோஜ்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம். ரமேஷ், எஸ்.சதீஷ்குமார், டி.தீலிப்குமார், மாநகர நிர்வாகிகள் மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், ஜீவரேகா விஜயராஜ், இல.குணசேகரன், அ.கண்ணன், கோல்டு எஸ்.பிரபு, ஹக்கிம் சேட், மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், நகர அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உட்பட பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

நிறைவாக மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.பாபாஜான் நன்றி கூறுகின்றார். முன்னதாக ஆ.தே.முருகையன் குழுவினரின் நவீன நாடகம் நடைபெறவுள்ளது.

## மகாகவி பாரதியார் நினைவு நாளான மகாகவி நாள் –

# சென்னை மாகாண முன்னாள் முதல்வர் டாக்டர் ப.சுப்பராயன் பிறந்த நாள் நிகழ்ச்சிகள்!

## அமைச்சர் பெருமக்கள் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்!

சென்னை, செப். 11–

மகாகவி பாரதியார் நினைவு நாளான மகாகவி நாள் சென்னை மாகாண முன்னாள் முதலமைச்சர் டாக்டர். ப. சுப்பராயன் பிறந்த நாள் நிகழ்ச்சிகளில், அமைச்சர் பெருமக்கள் பங்கேற்று அவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

தமிழ்நாடு அரசின் சார்பில், 11.9.2025 அன்று சென்னை மாகாண முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, காலை 9.30 மணியளவில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கும், அதே நாளில் மகாகவி பாரதியார் அவர்களின் நினைவு நாளான மகாகவி நாளில், காலை 10.00 மணியளவில் சென்னை, மெரினா கடற்கரை, காமராசர் சாலையில் அமைந்துள்ள பாரதியாரின் திருவுருவச் சிலைக்கும், அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து அருகில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவப் படங்களுக்கு மலர்கள் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

மகாகவி பாரதியார் அவர்கள் 11.12.1882 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் சின்னச்சாமி ஐயர் – இலட்சுமி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். இவரது கவிப்புலமையைப் பாராட்டி எட்டயபுர மன்னர் இவருக்கு, "பாரதி" என்று பட்டம் வழங்கினார். அதன்பின், நவீன தமிழ்க் கவிஞர்களின் முன்னோடியாகவும், தமிழ் மொழியில் சிறந்த இலக்கியவாதியாகவும் திகழ்ந்த பாரதியார், "மகாகவி எனும் புனைபெயர் கொண்டு அழைக்கப் பெற்றார். தந்தை இறந்த பிறகு சில காலம் தமது அத்தையாருடன் பாரதியார் காசியில் வாழ்ந்தார்.

மகாகவி பாரதியார் தமிழ், இந்தி, சமஸ்கிருதம், ஆங்கிலம் உள்ளிட்ட பல மொழிகளில் புலமை பெற்று விளங்கினார். மகாகவி பாரதியார் பல மொழிகளைக் கற்றறிந்தாலும், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று பாடி தமிழின் பெருமையை உலகறியச் செய்தார். மதுரை சேதுபதி பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். 1904 முதல் 1906 வரை "சுதேச மித்திரன் பத்திரிகையில் பணியாற்றினார். 1907 ஆம் ஆண்டு இந்தியா என்ற வார இதழையும், பாலபாரதம் என்ற ஆங்கில இதழையும் பொறுப்பேற்று நடத்தினார்.

கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற காவியங்களைப் படைத்தார். கீதையைத் தமிழில் மொழி பெயர்த்தார். மகாகவி பாரதியார் தமிழ்ப்பற்று, தெய்வப்பற்று, தேசப்பற்று, மானுடப்பற்று ஆகிய நான்கும் கலந்தவர். மகாகவி பாரதியார் மறைந்து நூறு ஆண்டுகள் கடந்தும், தமிழ்ச் சமுதாயத்திற்காக அவர் விட்டுச் சென்ற கவிதைகள், கட்டுரைகள், பாடல்கள் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் உயிரோட்டமாக நிலை பெற்றுள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்களால், "மக்கள் கவி" என்று அழைக்கப்பட்டார் மகாகவி பாரதியார்.

பாரதியாரின் சுதந்திரப் போராட்ட நடவடிக்கையால், ஆங்கில அரசால் கைது செய்யப்பட்டு கடலூர் சிறையில் அடைக்கப்பட்டார். 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் நாள் மறைந்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்த இல்லம் 12.5.1973 அன்று அரசுடைமையாக்கப்பட்டு நினைவு இல்லமாக மேம்படுத்தப்பட்டு இன்றளவும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாரதியின் நினைவு நாளான செப்டம்பர்–11, "மகாகவி நாள்"–ஆகக் கடைப்பிடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் சார்பில் "மகாகவி நாள்" ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு குமார மங்கலத்திற்கு அருகேயுள்ள போக்கம்பாளையத்தில் பிறந்தார். இவர் ஜமீன்தார் குடும்பத்தைச் சார்ந்தவர் ஆவார். சென்னை மாநிலக் கல்லூரியில் இளங்கலைப் பட்டமும், ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டமும், அயர்லாந்து டப்ளின் பல்கலைக்கழகத்தில் சட்டப் பயிற்சி பட்டமும் பெற்றார்.

1918 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றினார் . டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் சென்னை மாகாணத்தின் உள்ளாட்சித் துறை அமைச்சர், கல்வி மற்றும் சட்ட அமைச்சர், உள்துறை அமைச்சர், சட்டமன்ற மேலவை உறுப்பினர். இந்தோனேசியாவிற்கான இந்தியத் தூதுவர், இந்திய நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர், மாநிலங்களவை உறுப்பினர் ஆகிய பதவிகளை வகித்தார்.

சென்னை மாகாணத்தின் முதலமைச்சராகவும் டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் பதவி வகித்தார். இவரது ஆட்சிக் காலத்தில் தான், முதல்முறையாக அரசாங்கப் பணிகளில் வகுப்புவாரி பிரநிதித்துவ அடிப்படையில் இடஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.

1937 ஆம் ஆண்டு சென்னை மாகாணத்திற்கு மாநில சுயாட்சி வழங்கப்பட்டபின் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இராஜகோபாலச்சாரி அமைச்சரவையில் சட்டம் மற்றும் கல்வித் துறை அமைச்சராகப் பதவி வகித்தார். 1942 இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கு கொண்டு சிறை சென்றார்.

ஒன்றிய அரசின் தபால் துறை அமைச்சராக இருந்தபோது திருவள்ளுவர் மற்றும் பாரதியாரின் புகைப்படத்துடன் கூடிய தபால் தலைகளை வெளியிட்டார். அனைத்துத் தபால் துறை படிவங்களையும், தமிழ் மொழியிலும் கிடைக்கப் பெறச் செய்தார். இந்தியப் பாராளுமன்றத்தில் திருவள்ளுவர் படத்தைத் திறக்கச் செய்தார்.

தமிழுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அயராது உழைத்தவரான சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரான டாக்டர் ப.சுப்பராயன் அவர்களின் நினைவைப் போற்றுகின்ற வகையில், முதலமைச்சர் அவர்கள் சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அன்னாரின் திருவுருவச்சிலையை நிறுவி, 5.9.2023 அன்று திறந்து வைத்தார்கள்.

சென்னை மாகாண முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் பிறந்த நாளான செப்டம்பர் 11 ஆம் நாள் அரசு விழாவாகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

மகாகவி பாரதியார் நினைவு நாள், டாக்டர் ப.சுப்பராயன் பிறந்த நாள் ஆகிய இரண்டு நிகழ்ச்சிகளிலும் அமைச்சர் பெருமக்களுடன், மேயர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில்

# அனைத்துத் துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது!

காஞ்சிபுரம், செப். 11-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் அனைத்து துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (9.9.2025) காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் அனைத்து துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் துணை முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களான மகளிர் விடியல் பயணத் திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண், தமிழ்புதல்வன், முதல்வரின் முகவரி, மக்களுடன் முதல்வர், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், கலைஞர் கனவு இல்லம், மக்களைத் தேடி மருத்துவம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், குடிநீர் திட்டப் பணிகள், சாலை மேம்பாட்டுப் பணிகள் உள்ளிட்ட அனைத்து துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,

ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள அனைத்து அலுவலர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த மாவட்டத்தில் நடைபெறுகின்ற அரசு திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தை நாம் நடத்தியிருக்கின்றோம். நம்முடைய அரசு அமைந்த பிறகு இந்த நான்கரை ஆண்டுகளில் காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல்வேறு புதிய நலத்திட்டங்களை தந்திருக்கின்றார்கள். அந்த திட்டப்பணிகளின் பணி முன்னேற்றம் குறித்து இன்றைக்கு நாம் விவாதித்திருக்கின்றோம். அதேபோல் இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு முன் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரமுகர்களுடன் நான் சந்தித்து உரையாடிவிட்டு தான் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கின்றேன்.

அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவது, சுற்றுலா மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். அதுதவிர, நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், பொறுப்பு அமைச்சர், மக்கள் பிரதிநிதிகளுடன் கோரிக்கைகளை பெற்று, அவற்றையும் ஆய்வு செய்த பிறகே இந்த கூட்டத்திற்கு வருகை தந்துள்ளேன்.

சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் 6 மாதங்களே உள்ள நிலையில், முக்கியமான திட்டங்களின் தற்போதைய நிலை குறித்து மட்டுமே இன்றைக்கு நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். அனைத்து திட்டங்களையும் காலம் தாழ்த்தாமல் திட்டத்திற்கான குறிப்பிட்ட கால வரையரைக்குள் முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அரசு, முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு திட்டங்களை தீட்டினாலும், அவற்றை மக்களிடத்தில் கொண்டு சென்று மக்கள் பயனடைய வேண்டும் என்றால் வந்திருக்கக்கூடிய அரசு அலுவலர்கள் நீங்கள் தான் முக்கிய பங்காற்றி இருக்கின்றீர்கள். எனவே, இத்திட்டங்களை தாமதமின்றி செயல்படுத்தி, இந்த அரசுக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நற்பெயரை பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம் என்று துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், சி.வி.எம். பி.எழிலரசன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் மரு. ச. உமா, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், மாநகராட்சி மேயர் திருமதி.எம்.மகாலட்சுமி யுவராஜ் உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு

# தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை கணிசமாக உயர்வு!

## சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சென்னை,செப்.11-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி, நேற்று முன்தினம் (09.09.2025) சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், மாவட்ட வாரியாக சுற்றுலா வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து சுற்றுலா அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள சுற்றுலா வளாகத்தில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி, சுற்றுலாத்துறையில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் காரணமாக, இந்தியாவிலேயே உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கிறது. ஜூலை 2025 வரை உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை 20.35 கோடி ஆகவும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை 7.80 இலட்சம் ஆகவும் உள்ளது.

தமிழ்நாட்டில் பொழுதுபோக்கு சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா, ஆன்மீக சுற்றுலா, பண்பாடு சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா மற்றும் UNESCO போன்ற புராதன சின்னங்கள் சுற்றுலா என பல்வேறு வகையான சுற்றுலாத் தளங்கள் அமையப்பெற்றுள்ளதால், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை ஆண்டுதோறும் வெகுவாக உயர்ந்து வருகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சுற்றுலாத் தலங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள், இணைய வழி சுற்றுலா வழிகாட்டி வசதிகள், சுற்றுலாப் பயணிகளின் மனதில் நீங்காத மகிழ்ச்சியான சுற்றுலா அனுபவங்களை அளிக்கும் மலை ஏறுதல், மலைப்பகுதிகளில் தங்குதல் என சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் பல்வேறு திட்டங்களை மாவட்டந்தோறும் உருவாக்கி, சுற்றுலாப்பயணிகளின் வருகையை உயர்த்தும் வகையிலும், வருவாய் அதிகரிக்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள சுற்றுலா அலுவலர்களுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசகன், , சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், , கண்காணிப்பு பொறியாளர், திட்டப் பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் அனைத்து மாவட்ட சுற்றுலா அலுவலர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன், கரூரில் வருகின்ற செப்டம்பர் 17 அன்று நடைபெறவிருக்கும், தி.மு.க. முப்பெரும் விழா ஏற்பாடுகள் குறித்தான செயல் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கூட்டம், அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதி, சின்னதாராபுரம் சிவசெல்வி மஹாலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். அரவக்குறிச்சி எம்.எல்.ஏ. பி.ஆர்.இளங்கோ, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் மற்றும் திரளான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.